# 6 விரதங்களும் பண்டிகைகளும்

சைவ மக்களாகிய எம்மால் பின்பற்றப்படுகின்ற விரதங்களும், பண்டிகைகளும் எமது வாழ்வில் இறையுணர்வையும், புனிதத் தன்மையையும் ஏற்படுத்துகின்றன. சைவ சமயப் பாரம்பரியங்களைப் பேணி வாழ்வில் கடைப்பிடிப்பதற்கு அவை பற்றி நாம் அறிந்திருத்தல் அவசியமாகும். எனவே நாம் விரதங்கள், பண்டிகைகள் பற்றிக் கற்று, அவற்றை முறையாகக் கடைப்பிடித்து ஒழுகுவதன் மூலம் இறையருளைப் பெறுவோம்.

## விரதங்கள் :

''விரதமானது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விசேடமாக வழிபடல்'' என நாவலர் பெருமான் குறிப்பிடுகின்றார்.

சைவ மக்கள் அனுட்டிக்கும் விரதங்களுள் கடவுளுக்குரிய விரதங்களை சிவ விரதங்கள், விநாயக விரதங்கள், கந்த விரதங்கள், சக்தி விரதங்கள், விஷ்ணுக்குரிய விரதங்கள் என வகைப்படுத்தலாம். சிவராத்திரி, திருவாதிரை, பிரதோஷம், கேதார கௌரி விரதம் முதலியன சிவனுக்குரிய விரதங்கள் ஆகும். விநாயக சதுர்த்தி, விநாயகசஷ்டி என்பன விநாயக விரதங்கள் ஆகும். திருக்கார்த்திகை, கந்தசஷ்டி, வெள்ளிக்கிழமை விரதம் முதலியன முருகனுக்குரிய விரதங்களாகும். நவராத்திரி, சுக்கிரவார விரதம் என்பன சக்திக்குரிய விரதங்களாகும். ஏகாதசி, மஹாநவமி என்பன விஷ்ணுவுக்குரிய விரதங்களாகும்.

பொதுவாக விரதங்களை அனுட்டிக்கும் போது பின்பற்ற வேண்டிய நியதிகள் பல காணப்படுகின்றன. அவற்றுள் அதிகாலையில் நித்திரை விட்டெழுதல், புறத்தூய்மை,அகத்தூய்மை பேணுதல்,துவைத்து உலர்ந்த ஆடை அணிதல், ஆலயத்திற்குச் சென்று பக்தியுடன் இறைவனை

வழிபடுதல், திருமுறை ஓதுதல், உணவைச் சுருக்குதல், திருமுறைகளைப் என்பன சகல விரதங்களுக்கும் பொதுவானவை ஆகும்.

விரதம் அனுட்டிப்பவர் விரத காலங்களில் தாம்பூலந்தரித்தல், புகை பிடித்தல், பகலில் நித்திரை செய்தல், பொய் பேசுதல், பிறர் பொருளை அபகரித்தல் முதலியன செய்தல் கூடாது.

விரதங்கள் கடவுள் மீது பக்தியை ஏற்படுத்துகின்றன. பொறுமை, புலக் கட்டுப்பாடு, மனவலிமை உடையவர் களாகவும், ஒழுக்க சீலர்களாகவும் எம்மை மாற்றுகின்றன. எனவே நாம் விரதங்களை முறையாக அனுட்டித்து இறையருளையும், நற்பயன்களையும் பெற்றுக் கொள்வோமாக.



## பண்டிகைகள் :

சைவ மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியையும், மன நிறைவையும் இறை பக்தியையும் வளர்ப்பனவாக பண்டிகைகள் அமைந்துள்ளன. பண்டிகை என்ற சொல் பெருநாள், விஷேடநாள் என்னும் பொருளைத் தரும். பண்டிகை என்பது சமயம் சார்ந்ததும், வாழ்வியல் சார்ந்ததும் வருடந்தோறும் குறிப்பிட்ட நாளில் விருந்துடன் கொண்டாடப்படுவது பண்டிகை ஆகும். அதாவது பலவகை உணவுகளைச் சிறுவர்கள், பெரியோர்கள், அயலவர்கள் நண்பர்கள் கூடியுண்ணும் விருந்து வைபவமாகப் பண்டிகை விளங்குகின்றது. மேலும் உறவினர் வீட்டுக்கு விஜயம், புத்தாடை அணிதல், கலை நிகழ்ச்சி நடாத்துதல், வாழ்த்து மடல்களை அனுப்புதல் போன்ற குதூகலச் செயற்பாடுகள் பண்டிகைகளின் போது இடம்பெறுகின்றன.


தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி என்பன சைவ சமயத்தவர்களால் கொண்டாடப்படும் பிரதான பண்டிகைகளாகும். தைமாதப் பிறப்பன்று சூரியனுக்குப் பொங்கல் படைத்து வழிபடும் விழா பொங்கல் பண்டிகையாகும். உணவுற்பத்திக்கும் உயிர்களின்

வளர்ச்சிக்கும் வேண்டிய சக்தியைச் சூரியன் வழங்குகிறான். அதனால் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்துமுகமாக பொங்கிப் படைத்து வழிபடுவது வழக்கம்.



தைப்பொங்கல்

சித்திரை வருடப்பிறப்புப் பண்டிகை சித்திரை மாதப் பிறப்பன்று கொண்டாடப்படுவது.அன்றைய தினத்தில் மருத்து நீர் வைத்து மங்கள நீராடிப் புத்தாடை அணிந்து கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபடுகின்றோம். அதன் பின்னர் சுபநேரம் பார்த்து கைவிஷேசம் கொடுத்து வாங்குவதும், உறவினர்களுடன் உறவாடுவதும் நற்காரியங்களைத் தொடங்குவதும் புதுவருடப் பண்டிகைகளில் இடம்பெறும் ஏனைய அம்சங்களாகும்.



மருத்து நீர் வைத்தல்



கைவிஷேடம் பெறுதல்

ஐப்பசி மாதத்தில் வரும் கிருஷ்ண பட்சத்துச் சதுர்த்தசி தினத்தில் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்துக் கொண்டாடப்படுவதால் இப்பண்டிகை தீபாவளி எனப்பட்டது. நரகாசுரன் என்ற அசுரனை கிருஷ்ணபகவான் அழித்த தினமே தீபாவளி எனவும் கருதப்படுகினறது. இத்தினத்தில் வீடுகளில் அறுசுவை உணவு தயாரித்து உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் விருந்தளிப்பது முக்கியதுவம் வாய்ந்தது.

எனவே சைவர்களாகிய நாம் கொண்டாடும் பண்டிகைகளின் மூலம் ஒற்றுமை உணர்வையும் பகிர்ந்துண்ணும் பண்பையும் வளர்த்துக் கொள்வோமாக.



தீபாவளி

## பயிற்சிகள்

1. விரதம் என்றால் என்ன?
2. சிவ விரதங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
3. விரதங்களை அனுட்டிக்கும் போது, கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான நியதிகள் சில தருக?
4. பண்டிகை என்றால் என்ன?
5. நாம் கொண்டாடும் பண்டிகைகள் மூன்றின் பெயரை எழுதுக?
6. தீபாவளிப் பண்டிகை எப்போது கொண்டாடப்படுகிறது?

## செயற்பாடு

★ விரதங்கள் அல்லது பண்டிகைகள் என்ற தலைப்பில் வகுப்பறையில் உரை நிகழ்த்துக.

## பாடச்சுருக்கம்

- ★ விரதங்களும், பண்டிகைகளும் எமது வாழ்வில் இறை உணர்வையும், புனிதத் தன்மையையும் ஏற்படுத்துகின்றன.

- ★ கடவுளுக்குரிய விரதங்களை சிவ விரதங்கள், விநாயக விரதங்கள், கந்த விரதங்கள், சக்தி விரதங்கள், விஷ்ணுக்குரிய விரதங்கள் என வகைப்படுத்தலாம்.

- ★ விரதங்கள் கடவுள் மீது பக்தியையும், பொறுமை, புலக்கட்டுப்பாடு, மன வலிமை உடையவர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் எம்மை மாற்றுகின்றன.

- ★ பண்டிகை என்பது சமயம் சார்ந்ததும், வாழ்வியல் சார்ந்ததும் வருடந்தோறும் குறிப்பிட்ட நாளில் விருந்துடன் கொண்டாடப் படுவதுமாகும்.

- ★ தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு, தீபாவளி என்பன சைவர்களால் சிறப்பாக் கொண்டாடப்படும் பண்டிகைகளாகும்.